பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 14 திங்கட்கிழமை 01.12.2025 | அதிர்வு 123

## காணாமல்போன 5 சிப்பாய்களும் சடலங்களாக மீட்பு!

சுண்டிக்குளம் – களப்பு பகுதியில் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது காணாமல்போன 5 கடற்படைச் சிப்பாய்களும் 03

## இந்தப் பேரழிவிலிருந்து மீண்டெழுவோம்! உதவி வழங்கும் வெளிநாடுகளுக்கு நன்றி!!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

CLICK HERE VIDEO



"முழு நாடும் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. எனினும், நாடு முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டுவரப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய விசேட உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

# 334 ஆக உயர்ந்தது சாவு எண்ணிக்கை



### 370 பேரைக் காணவில்லை

இலங்கையில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334 ஆக உயர்ந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 370 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. 03

## நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்ட ஹெலி விபத்துக்குள்ளாகியதில் விமானி மரணம்!

### நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில்



வென்னப்புவ பகுதியில் பேரிடர் நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கை விமானப் படையின் பெல் 212 ஹெலி விபத்துக்குள்ளாகியதில் விமானி உயிரிழந்துள்ளதுடன் அதில் இருந்த மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விமானி உள்ளிட்ட ஐவர் காயங்களுடன் மாரவில ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், விமானி விங் கொமாண்டர் நிர்மல் சியம்பலாபிட்டிய உயிரிழந்தார் என்று இலங்கை விமானப் படை 03



இன்றும் எனது இந்தப் பத்தி என் சுயபுராணத்துடன் தொடங்குகின்றது. அதற்குக் காரணம் உண்டு.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நான் ஒரு விளையாட்டு வீரன். கல்வியை விட்டு விட்டு, விளையாட்டில் மட்டும் அதிக ஈடுபாடு காட்டிய விற்பன்னன். வகுப்பறையில் குழப்படி, மைதானத்தில் விளயாட்டு என்றுதான் பள்ளிக்காலம் தள்ளிப் போனது. பாடசாலை மட்டத்தில் இலங்கையின் தேசிய அணியை சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்திய வீரனானேன்.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடு காட்டிய மாணவ முதல்வன் என்ற கோதாவில் அதிபர், ஆசிரியர், சக மாணவர்கள் மத்தியில் ஒரு செல்வாக்கும், 04

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இந்தப் பேரழிவிலிருந்து...**

அவர் மேலும் உரையாற்றுகையில், “ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கைப் பேரழிவுக்கு முகங்கொடுத்துள்ளோம் என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம் என்பதையும் அறிவோம். முழு நாடும் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது.

நாலாபக்கங்களிலிருந்தும் முழு நாடும் நீரில் மூழ்கிப் பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். இதனை நாம் வெற்றிகொள்ள வேண்டும். இந்தக் கொடூரமான இயற்கைப் பேரழிவினால் நமது சிறிய தீவை உலுக்க முடிந்தாலும், இந்த நாட்டு மக்களின் மனிதநேயத்தையும் உறுதியையும் எந்த வகையிலும் அசைக்க முடியாது என்பதை இது மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

எனது அன்பான பிரஜைகளின் அசைக்க முடியாத தைரியத்துடன், இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று நாங்கள் ஆணித்தரமாக நம்புகின்றோம். அன்பான பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே, இந்தப் பேரழிவில் இறந்த அனைவரையும் மீண்டும் உயிர்ப்பிக்க முடிந்தால், எந்தச் சூழ்நிலையிலும் அதைச் செய்வதற்கு நாங்கள் இருமுறை யோசிக்க மாட்டோம். ஆனால் நாம் யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொள்ள வேண்டும்.

இழந்தவர்கள் தொடர்பான வேதனை என்றென்றும் எம்முடன் இருக்கும். இறந்தவர்கள் அனைவரும் நமக்கு ஒரு இலக்கம் அல்ல. ஒவ்வொரு உயிருக்கும் ஒரு பெயர், ஒரு முகம் மற்றும் ஒரு கதை உள்ளது. இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இது அனுதாபத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அந்த உயிர்களை அந்தக் குடும்பங்களுக்குத் திரும்பக் கொண்டுவர முடியாவிட்டாலும், ஏனைய அனைத்தையும் வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதேபோன்று காணாமல்போனவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கின்றார்கள் என்றும் நாங்கள் நம்புகின்றோம். இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பலருடைய துன்பத்தைத் தணிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கபலமாக இருப்பதற்காக முன்வந்த அனைவரையும் நாம் அன்புடன் அரவணைக்கின்றோம்.

இயற்கை அனர்த்தங்களை முறையாகக் கட்டுப்படுத்த முடியாத போதும் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் மற்றும் அவசர நிலைமைகளை உரிய வகையில் முகாமைத்துவம் செய்தல், பழைய நிலைக்கு அல்லது முன்பை விட சிறந்த நிலைக்கு மீண்டும் கட்டியெழுப்பும் மூன்று செயல்முறைகளின் முக்கியத்துவம் அரசுக்குரியது. அதற்குத் தேவையான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

இந்த அனர்த்தத்தை எதிர்கொள்ளும் போது, மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் கருவிகளைக் கொண்ட ஒரு நாட்டில், நம்மிடம் உள்ள விலைமதிப்பற்ற மனித வளம் வேறு எதையும் விட மதிப்புமிக்கது என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். தன்னம்பிக்கை நிறைந்த மற்றும் அனர்த்தத்தின் போது விட்டுச் செல்லாத அனைத்து சந்தர்ப்பங்களிலும் உள்ள மனஉறுதியுடனான எமது நாட்டு பிரஜைகள் தொடர்பில் நாம் பெருமைப்படுகின்றோம்.

நாம் இதுவரை கண்டிராத மிகப் பெரிய மறுசீரமைப்பு முன்னெடுப்பு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் பணியை எதிர்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அழிவின் அளவை மதிப்பிடுவது மிகவும் பாரதூரமானது. ஆனால், வெள்ளம், புயல் அல்லது ஏதேனும் பேரழிவுக்குப் பின்னர், நம் நாட்டு மக்களின் முதல் பணியாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுவதும், அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணத்தை வழங்குவதுமாகவே உள்ளது.

அதற்காக, எங்கள் முழு அரச பொறிமுறையையும் மிகவும் திறமையாக வழிநடத்த முயற்சி செய்தோம். குறிப்பாக, எங்கள் முப்படையினரும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் உயிரைத் துச்சமாக மதித்து இந்தப் பணியில் துணிவுடன் செயலாற்றினார்கள். அவர்கள் தொடர்பில் பெருமை அடைகின்றோம்.

அதேபோன்று அமைச்சுக்களின் செயலாளர்கள் முதல் கிராம அலுவலர் வரை முழு அரச பொறிமுறையும் இந்தப் பணிக்காக மிக விரைவாகத் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு பாரிய பங்காற்றி வருகின்றனர். அவர்கள் அதை தங்கள் கடமைக்கு அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமானப் பணியாகப் உணர்ந்து, அர்ப்பணிப்புடன் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். அவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

மேலும், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க ஏராளமான மக்கள் தாமாகவே முன்வந்து பங்களித்தனர். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் பெரும் மனிதாபிமானத்துடன் அவர்கள் பங்காற்றினர். இந்த நேரத்தில் நாம் அதை நினைவுகூர வேண்டும்.

மேலும், இந்த மீட்புப் பணியில், நமது அயல் நாடுகளும் நட்பு நாடுகளும் எங்களுக்குப் பெருமளவு உதவிகளைச் செய்துள்ளன. ஹெலிகொப்டர்கள் மற்றும் நிவாரண மற்றும் மீட்புப் படைகளை வழங்குவதன் மூலம் வெளிநாடுகள் ஏற்கனவே எங்களுக்கு நட்புக் கரம் நீட்டியுள்ளன. நமது நாட்டு மக்கள் சார்பாக நாங்கள் அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்தச் சுற்றறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மாற்றியமைத்து, அவர்கள் எங்கு இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது எங்கு வசிக்கின்றார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அரச நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளோம். சில சுற்றறிக்கைகள் அதிகாரிகளுக்குத் தேவைக்கேற்ப பணத்தைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்தச் சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 500 இலட்சம் ரூபா வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம்.

மேலும், கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3 ஆயிரம் கோடி ரூபா எங்களிடம் உள்ளது. அதை நாங்கள் நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதனை இந்தச் செயற்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

2025 வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாவிட்டால், குறைநிதிப்பீட்டின் ஊடாக மேலும் நிதியை வழங்கலாம். வழங்கியுள்ள நிதியின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, சுகாதார உதவிகளை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

மேலும், இந்த அனர்த்த சூழ்நிலை காரணமாக, ஏராளமான அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் மின்சார வலையமைப்பு சேதமடைந்துள்ளது. தகவல் தொடர்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பிரதேச வீதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பல உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் அழிக்கப்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை துரிதமாக மீளமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அனர்த்தத்தால் பாதிக்கப்படாத பகுதி ஊழியர்கள் இந்த உள்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சுக்களுக்கு நிறுவனங்களுக்கு வேறு பணிகள் இருந்தாலும் பிரதான பணியாக கருதி இந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்காக நாம் ஏற்கனவே திட்டமொன்றைத் தயாரித்துள்ளோம். மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அத்தியாவசிய நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் தேவையான பங்களிப்பையும் வழிகாட்டுதலையும் நாங்கள் வழங்கி வருகின்றோம். அதனால், மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை முழுமையாகச் செயற்படுத்த முடியும் என்று நான் நம்புகின்றேன்.

வீதிகள் மற்றும் பாலங்கள் முதல் பாடசாலைகள் மற்றும் நீர் வசதிகள் வரை உள்கட்டமைப்பு வசதிகளைச் சீர்செய்ய பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

சீராகவும் முறையாகவும் எழுந்து நிற்கப் போராடிக்கொண்டிருந்த ஒரு நாட்டுக்கு இந்த நிலைமை சாதாரண சவால் அல்ல. சிறு சுயதொழில் முயற்சி முதல் பாரிய அளவிலான கைத்தொழில்கள் வரை, சிறு தொழில்முனைவோர் முதல் பாரிய அளவிலான தொழில்முனைவோர் வரை, அனைத்துத் தரப்பினரும் தங்கள் வருமானத்தை இழந்துள்ளனர். விவசாயம், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இவை அனைத்தையும் மிக

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

**இந்தப் பேரழிவிலிருந்து...**

விரைவாக மேம்படுத்துவதற்கு நமக்கு ஒரு துரித திட்டம் அவசியம் . அதனால் தான், இந்த அனர்த்த சூழ்நிலையை முகாமைத்துவம் செய்து, விரைவான மற்றும் திறமையான மீள்கட்டமைப்புக் குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் வளங்களை வழங்க அவசர கால நிலையை அறிவித்துள்ளோம். இந்த அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வ தற்கும், நமது நாட்டைச் செயற்திறனுடன் கட்டியெழுப்புவதற்காக அன்றி வேறு எந்த அடக்குமுறை நடவடிக்கைக்கும் இந்த அவசர கால நிலையைப் பயன்படுத்த மாட்டோம் என்பதை இந்த நாட்டின் பிரஜைகளுக்கு உறுதியளிக்க விரும்பு கின்றேன்.

இந்த அவசரகாலச் சட்டத்துக்கு அமைவாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை ஏற்கனவே நியமித்துள்ளோம். அனைத்து சேவை களையும் ஒரே இடத்தில் மையப்படுத்தி யுள்ளோம். அத்தியாவசிய சேவை அலு வலகங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அனைத்து முக் கிய நிறுவனங்களின் அதிகாரிகளும் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபட்டுள்ள னர். எனவே, இந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் மூலம் மிகவும் திறமையான மையப்படுத்தப்பட்ட செயற்பாட்டை மேற் கொள்ள ஒரு திட்டத்தை நாங்கள் தயா ரித்துள்ளோம்.

அதேபோன்று , நமது நாட்டை முன்பு இருந்ததை விட மிகவும் முன்னேற்றமான நாடாக மாற்ற வேண்டியது எமது அடுத்த பணியாகும். அந்த நோக்கத்துக்காக, புனரமைப்புக்குத் தேவையான நிதியை வழங்க ஒரு நிதியத்தை நிறுவ எதிர் பார்க்கின்றோம். அந்த நிதியத்தை நிர்வகிக்க தனியார் துறை, வெளிநாட் டலுவல்கள் அமைச்சு , நிதி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன அடங்கிய கூட்டு முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பாரிய பொறுப்பை நாம் வழங்கியுள் ளோம்.

நமது நாட்டைக் கட்டியெழுப்புவ தற்குத் தேவையான நிதியை நாம் பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். எங்கள் நட்பு நாடுகளுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றி அவர்களின் உதவியைப் பெறுதல், பல்வேறு சர்வ தேச அமைப்புகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் உதவியைப் பெறுதல், உள்நாட்டு வர்த்தகர்கள் மற்றும் தொழிலதி பர்களுடன் கலந்துரையாடி அவர்களின் உதவியை நாடுதல் ஊடாக அதனைப் பெறலாம்.

குறிப்பாக இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கையர்கள் உதவியை வழங்க கடுமையாக உழைத்து வருகின் றனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். அவர்களுக்குத் தேவை யான ஆதரவை வழங்க நாங்கள் நடவ டிக்கை எடுத்துள்ளோம். எனவே, இந்த அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கு ஒரு வலுவான நிதியமொன்றை உருவாக்க வேண்டும்.

அதேபோன்று தமது துறை எதிர் கொள்ளும் சவால்கள் மற்றும் மீள் கட்டமைப்புக்குத் தேவையான நிதி தொடர்பான ஒழுங்கான பட்டியலைத் தயாரிக்க அனைத்து நிறுவனங்க ளுக்கும் அறிவித்துள்ளோம். துல்லிய மான தரவு மற்றும் துல்லியமான தகவல்கள் இல்லாததால் ஏற்படும் பாத கங்களை நாங்கள் அனுபவித்துள் ளோம். இந்த நெருக்கடியில் இருந்து மீள்வ தற்கு, எங்களுக்குத் துல்லியமான தரவு மற்றும் தகவல்கள் அவசியம். அதன்படி அனைத்து அரச நிறுவனங்களும் அதற்காகப் பணியாற்றி வருகின்றன.

இந்தத் துரித அபிவிருத்தித் திட்டத் தின் ஊடாக நமது நாட்டை மீண்டும் கட்டி யெழுப்ப முடியும். நீண்டகால இலக்கு களை அடையவும், நாடென்ற வகையில் ஒன்றாக வாழ்வதற்கான வாய்ப்புகளை வரலாறு தவறவிட்டுள்ளது. இந்தத் தடவை அதனைத் தவறவிடாது நிறைவேற்றும் உறுதிப்பாடு நமக்கு உள்ளது.

இந்தக் கடினமான நேரத்தில் ஏற்க னவே முன்வந்து எங்களுக்கு ஆதரவ ளித்த அனைத்து நட்பு நாடுகள், அவற் றின் தலைவர்கள், பிரஜைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவைப் பெற முறையான பொறிமுறையை நிறு வியுள்ளோம்.

இந்தப் பேரழிவு நடந்துள்ள தருணத் தில், நாட்டுக்காக அனைத்து அரசியல் வேறுபாடுகளையும் மறப்போம். இனம், மதம், கட்சி அல்லது நிற வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபடுவோம். எமக்கு அரசி யல் செய்ய நிறைய நேரம் இருக்கின்றது. பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ள அதிக நேரம் கிடையாது. ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர், தனித்தனியாக அரசியல் செய்ய முடியும்.

குறிப்பாக இந்த நாட்டைக் கட்டி யெழுப்புவதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பணியாற்றி வருகின் றேன். நமது நாட்டின் பிரஜைகள் தொடர் பில் முழுமையான நம்பிக்கை எனக் குள்ளது. நமது நாட்டின் முப்படைகள், பொலிஸார் மற்றும் நமது நாட்டின் அரச சேவை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

இந்த நாட்டிலுள்ள கைத்தொழிற்துறை யினர், தொழிலதிபர்கள், புத்திஜீவிகள் மற்றும் புத்தாக்குநர்கள் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உள்ளது. வெளி நாடுகளில் வாழும் இலங்கையர்கள் மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது. எங்கள் நட்பு நாடுகள் மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது.

அந்த நம்பிக்கையுடன், இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்த விட யத்தில் நாங்கள் தலையிட்டுள்ளோம்.

நாங்கள் நிச்சயமாக முன்பு இருந் ததை விட சிறந்த நாட்டைக் கட்டியெழுப்பு கின்றோம். அதனைப் பூஜ்ஜியத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும் என்ற போதும் அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

குறுகிய வேறுபாடுகள் இல்லா மல் இந்தக் கூட்டு முயற்சியில் சேர அனை வருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். ஒரு தேசிய மற்றும் சர்வதேச திட்டத் தின் மூலம், சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்பட்டு நமது மனச்சாட்சிக்கு அமை வாக எதிர்பார்க்கும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிக்குமாறு கோருகின்றேன்.

எந்த இருளிலும் ஒளி பிறக்கின்றது என்று நாங்கள் நம்புகின்றோம். இந்த இருண்ட நாட்கள் கடந்து போகும் என்றும் நாங்கள் நம்புகின்றோம். எனவே, நாம் ஒன்றாக எழுச்சி பெறுவோம். இந்தக் கண்ணீர் விடும் இந்த அழகிய தேசத் தைக் குணப்படுத்துவோம் . சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**காணாமல்போன..**

சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று இரவு தெரிவித்துள்ளது.

மேற்படி 5 கடற்படைச் சிப்பாய்களும் நேற்றுப் பகல் காணாமல்போயிருந்த னர். அவர்களைக் கண்டுபிடிக்கக் கடற் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த வேளையிலேயே ஐவரும் மாலை சடலங்களாக மீட்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

**நிவாரண...**

அறிவித்துள்ளது.

விமானப் படைச் சிப்பாய் ஒருவரும், நிவாரணப் பணியாளர்கள் மூவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த ஹெலி அவசரமாகத் தரை யிறக்க முற்பட்டபோதே விபத்துக்குள் ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

**334 ஆக...**

மலையகத்தில் மண்சரிவுகளா லேயே அதிகமானோர் உயிரிழந்துள்ள துடன் காணாமல்போயும் உள்ளனர்.

அதிலும் கண்டி மாவட்டத்திலேயே அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் காணாமல்போயும் உள்ளனர்.

அதேவேளை, மோசமான கால நிலையால் 25 மாவட்டங்களில் 3 இலட் சத்து 9 ஆயிரத்து 607 குடும்பங் களைச் சேர்ந்த 11 இலட்சத்து 18 ஆயிரத்து 929 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

1,494 தங்குமிடங்களில் 55 ஆயி ரத்து 747 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 790 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலையால் யாழில் மூவர் மரணம்!

## 46 ஆயிரத்து 638 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மூவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு 2 வீடுகள் முழுமையாகவும், 267 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 57 இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு 5ஆயிரத்து 323 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.” – என்றார்.

# ஏ-9 வீதி போக்குவரத்து வழமைக்கு!

வெள்ளப் பெருக்கால் மூடப்பட்டிருந்த ஏ - 9 வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

இதையடுத்து நேற்று இரவு முதல் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அரவணைப்பும் எப்போதும் தாராளமாக இருந்தன. அதன் காரணமாக என் போன்ற ஒரு சிலரின் குழப்படிகள், அத்துமீறல்கள், அடாவடித்தனங்களை கல்லூரிச் சமூகம் சாதாரண கண்டனத்தோடு சமாளித்து – சகித்து – போகும் நிலைமையும் கட்டாயமும் கூட இருந்தன. இல்லாவிட்டால் எப்போதோ பாடசாலை விடுகைப் பத்திரத்தைக் கையில் தந்து அனுப்பியிருப்பார்களோ என்னவோ....!

ஒரு சமயம் எங்களுடைய லூட்டி எல்லை கடந்ததினால், மாணவ முதல்வர்களின் கூட்டத்தில் வைத்து எங்களில் ஒரு சிலரின் பெயரைக் குறிப்பிடாமல் ஒரு வசனத்தை என்னுடைய கல்லூரி அதிபர் காட்டமாக எடுத்துரைத்தார். அந்த வசனம் என் மனதில் ஆழமாகப் பதிந்து கொண்டது.

“பத்தையில் (பற்றையில்) இருப்பதைப் பிடித்து மெத்தையில் வைத்தால் அது பத்தையை நோக்கித்தான் ஓடும். என்ன செய்வது?” – என்று எங்களைப் பார்த்து ஏளனத்தோடு விசனித்தார் பொறுமையின் சிகரமான எங்கள் அதிபர்.

அது – அந்த வாசகம் – ஆணி அடித்தால் போல என் மனதில் அன்று பதிந்து போனது.

இன்று நான் சொல்லவரும் சம்பவமும் அப்படி பத்தையில் இருப்பதைப் பிடித்து மெத்தையில் வைத்தால், அது பத்தையில் நடப்பது போலதான் நடந்து கொள்ளும் என்ற கருத்து நிலைப்பாட்டை எனக்கு தந்திருப்பதால் பழைய விடயத்தைக் குறிப்பிட்டேன். இனி விடயத்துக்கு வருவோம்.

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் நிவாரணப் பணியில் ஈடுபட்ட கிராமசேவையாளருடன் முறைகேடாக நடந்து, அவரைத் தாக்கினார் என்று கூறப்படும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது ஏற்பட்ட பாதிப்பினால் பரந்தன் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த இடைத் தங்கல் முகாமில் நேற்று முன்தினம் இந்தக் கிராமசேவையாளர் பணியில் இருந்துள்ளார். இதன்போது ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளியில் சமைத்த உணவை பார்ஸலாக எடுத்து வந்து விநியோகிக்க முற்பட்டபோது, முகாமில் தங்கியிருக்கும் மக்களிற்கு முகாமில் சமைத்த அல்லது பொதுச் சுகாதார உத்தியோகத்தர் பரிசோதனை செய்து அனுமதித்த உணவை மட்டுமே வழங்க முடியும் என்பதே அரச ஏற்பாடு, அவ்வாறு இல்லையேல் நீங்கள் பிரதேச செயலாளரையே அணுக வேண்டும் என இந்தக் கிராமசேவையாளர் அறிவுறுத்தி, உணவுப் பார்ஸல் விநியோகத்தைத் தடுக்க எத்தனித்துள்ளார்.

இந்தக் கிராமசேவையாளரின் அறிவுறுத்தலை ஏற்க மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர் கிராமசேவையாளருடன் வாய்த்தரக்கப்பட்டபடி, அவரையும் மீறி உணவுப் பார்ஸல்களை வலோற்காரமாக விநியோகம் செய்தபோது, கிராமசேவையாளர் அதை மறிக்க முற்பட்டார் என்று கூறப்படுகின்றது. அந்தச் சமயம் கிராம சேவையாளரின் வயிற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் குத்தினார் என முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் போன்றோரின் கவனத்திற்குக் கொண்டு சென்ற கிராம சேவையாளர் பொலிஸிலும் புகாரளித்துள்ளார் எனத் தெரிகின்றது.

இவ்வாறு கிராமசேவையாளரைத் தாக்கி விட்டு, அங்கிருந்து வெளியேற முற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை முகாமில் இருந்த மக்கள் தடுக்க முற்பட்டனராம். அந்தக் களேபரத்தில் பொதுமகன் ஒருவன் கைநீட்டி விட்டார் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் வாகனத்தை நிறுத்தாமல், வெளியேற முற்பட்டமையினால் அவரின் வாகனத்தின் பக்க கண்ணாடி அடித்து நொறுக்கப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் பொலிஸில் முறைப்பாடு செய்தார் என்றும் கூறப்பட்டது. எனினும் அவரின் பொலிஸ் முறைப்பாடு குறித்தும் அதில் அவர் என்ன தெரிவித்தார் என்பது குறித்தும் என்னால் உடனடியாக ஊர்ஜிதப்படுத்த – உறுதிப்படுத்த – முடியவில்லை.

இந்த விடயத்தை அறிந்த மாவட்ட கிராமசேவையாளர்கள் உடனடியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முற்பட்ட போது, மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளின் பெயரில், பேரிடர் அனர்த்த காலத்தை கருத்தில்கொண்டு, பணிப் புறக்கணிப்பை கைவிட்டு, அந்த விடயம் வடக்குத் தொடர்பான அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அமைச்சர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்றைய தினம் நேரில் சென்று இது தொடர்பில் ஆராய்ந்தமையோடு கிராமசேவையார்களுடனும் கலந்துரையாடி இப்படியான செயலை தமது கட்சி அனுமதிப்பதில்லை எனப் பதிலளித்துள்ளார்.

சரி, இந்த நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்று நான் குறிப்பிடப்போவதில்லை. அதை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன்.

தமது பெயரைப் போலவே தோற்றத்திலும் தென்படும் அவரின் இந்தச் செயலை அறிந்தபோது, பாடசாலைக் காலத்தில் எனது அதிபர் எங்களில் சிலரைப் பார்த்துக் கூறிய கூற்றுத்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. அதனால்தான் ஆரம்பத்தில் அதை விவரித்திருந்தேன்.

என் அதிபர் எங்களில் சிலரைப் பார்த்துக் கடுப்புடன் கூறிய அந்த கூற்றைப் பொருத்திப் பார்த்துக் கொள்வது வாசகர்களைப் பொறுத்தது.

# கலா ஓயா வெள்ளத்தில் சிக்கிய பஸ்ஸில் பயணித்த யாழ். இளைஞரைக் காணவில்லை!






யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய நிலையில் பஸ்ஸில் இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று பெற்றோர் தேடி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் அனுராதபுரம் – புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது. அதன்போது பஸ்ஸினுள் சுமார் 60 பேர் வரையில் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.


முதல் கட்டமாக பஸ்ஸில் சிக்கியவர்கள் அருகில் இருந் வீடொன்றின் கூரை மீது ஏற்றி பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு, பின்னர் கடற்படையினரின் உதவியுடன் அவர்கள் படகுகளில் ஏற்றப்பட்டு கடுமையான போராட்டத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில், அந்த பஸ்ஸில் பயணித்த இளைஞர் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் தணிகாசலம் பத்மநிகேதன் (வயது 36) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார்.

பஸ்ஸின் மேற்கூரையில் அமைந்திருப்பவர்கள் தொடர்பில் வெளியான காணொளி ஒன்றில் பத்மநிகேதன் காணப்படுகின்றார்.

அதேவேளை, வீட்டின் கூரையில் இருந்த வேளை கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்தது எனவும், அதன் போது சிலர் வெள்ளத்தில் விழுந்த நிலையில், அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# சிவனொளிபாத மலையில் மண்சரிவு ஏற்படவில்லை

சிவனொளிபாத மலையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளில் எந்த வித உண்மைத் தன்மையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபாத புனித தலத்தின் அதிபதி பெங்கமுவ ஸ்ரீதம்மதின்ன தேரர் இதனை அறிவித்துள்ளார்.

ஒரு விசேட அறிக்கையை வெளியிட்டுள்ள அவர், ஒவ்வொரு ஆண்டும் அதிக மழை பெய்யும் காலங்களில் சிவனொளிபாத மலைக்குக் கீழே உள்ள மலையில் வளர்ந்துள்ள தாவர வகைகள் கீழே விழுவது வழக்கம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு இயற்கையான நிகழ்வு என்றும், இந்த சம்பவம் இரத்தினபுரி மார்க்கத்தில் தான் நடந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு இல்லை; விநியோக நடவடிக்கை தொடர்கிறது

வீட்டுப் பாவனைக்கான எரிவாயு சிலிண்டர்களின் கையிருப்பு போதுமான அளவு இருப்பதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி எரிவாயு நிரப்பும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அனர்த்தம் காரணமாக செல்ல முடியாத பகுதிகளுக்கு எரிவாயு விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

அத்துடன், எரிவாயுவைப் பெறுவது குறித்த தேவையான தகவல்களை 1311 என்ற துரித இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாடாளுமன்றில் இன்று புயல்?

பேயாட்டம் போட்ட புயல் ஓய்ந்து விட்டது. குறைந்தது 344 பேர் உயிரிழந்தனர் என்பது இதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 370 பேரை இன்னும் காணவில்லை என்று பேரிடர் மேலாண்மை மையம் குறிப்பிட்டுள்ளது. போகின்ற போக்கில் மனித உயிரிழப்பு ஆயிரத்தைத் தாண்டும் போல தெரிகின்றது.

நாட்டில் ஆட்டம் போட்ட புயல் ஓய்ந்தாலும், இன்று நாடாளுமன்றம் கூடும் போது அங்கு அரசியல் புயல் வீசக்கூடிய நிலைமை தென்படுகின்றது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட தத்தமது மாவட்ட மக்களோடு அருகில் இருந்து மீட்பு நடவடிக்கைகள், உடனடி நிவாரணப் பணிகள், ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் போன்றவற்றை ஒன்றிணைத்து, கவனிக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் தரப்பின் விடாப்பிடியான நிலைப்பாடு, வரவு - செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதம் என்ற பெயரில் கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் கட்டிப்போடும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இன்று நாடாளுமன்றம் கூடினாலும், தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்தங்களைக் கையாள்வது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற வேண்டும் என எதிரணி கேட்கும் கோரிக்கையை ஆளும் தரப்பு செவிமடுக்கும் நிலையிலும் இல்லை என்று தெரிகின்றது. கவனிக்கவும், இது விடயத்தில் எதிரணி கோருவது நாடாளுமன்ற விவாதம் அல்ல, நாடாளுமன்றக் கலந்துரையாடலே.

நாடாளுமன்றத்தின் முன்னைய நிகழ்ச்சி நிரல் திட்டத்தின்படி, வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் வரும் ஆறாம் திகதியுடன் முடிவடைய வேண்டும். ஆனால் அது நிச்சயம் ஆறாம் திகதி முடிவடைய வேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை. டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் விடயத்தை ஒப்பேற்றினால் போதும். அதற்கு போதிய கால அவகாசம் உண்டு.

அப்படி இருக்கையில், ஏற்கனவே நிறுத்தப்பட்ட இரண்டுநாள் குழுநிலை விவாதத்தையும் நடத்தி முடிப்பதற்காக இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தை நள்ளிரவு 12 மணி வரை நீடித்து நடத்தவும் ஆளும் தரப்பு முடிவு செய்திருக்கின்றது. வரும் 6 ஆம் திகதிக்குள் விடயத்தை இப்படி அவசரப்பட்டு முடிக்கும் ஆளும் தரப்பின் தீர்மானத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் நோக்கம் - மர்மம் - புரியவில்லை.

தத்தமது மக்களோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்து பணியாற்ற வேண்டிய இந்த இக்கட்டு சமயத்தில், அதற்கும் அவர்களை அனுமதிக்காமல், நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் தொடர்பில் அதை வெற்றிகரமாகத் தாண்டி வருவது சம்பந்தமாக ஆளும் கட்சியும் எதிர்த்தரப்பினரும் ஒன்று கூடி கலந்துரையாடவும் இணங்காமல், ஆளும் தரப்பு பிடிவாதம் பிடிப்பதால் இன்று நாடாளுமன்றில் குழப்பம் ஏற்படும் சூழல் தென்படுகின்றது.

இன்று மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுத் தொடர்பான குழுநிலை விவாதம். சில சமயங்களில் அந்த விவாதத்தை ஆரம்பித்து வைக்க வேண்டிய எதிரணி அதைச் செய்யாமல் வெளிநடப்பு செய்தால் அந்தக் குழுநிலை விவாதம் நடைபெறாமல் போகும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

வெளியில் புயல் ஓய்ந்து விட்டது. நாடாளுமன்றத்தில் இன்று அரசியல் புயல் வீசும் வாய்ப்புகள் தென்படுகின்றன.

# கண்டி மாவட்டத்தில் 103 மரணங்கள் பதிவு

## 180 பேர் மாயம்

கண்டி மாவட்டத்தில் அதிக மழைப் பொழிவு மற்றும் அனர்த்த நிலைமை காரணமாக, 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் 103 மரணங்கள் பதிவாகியுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி சுமார் 180 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கண்டி மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 11,129 குடும்பங்களைச் சேர்ந்த 40,821 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்த 6,874 குடும்பங்களில், 4,764 குடும்பங்களைச் சேர்ந்த 21,500 பேர் இடம்பெயர்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



# களனி கங்கை தாழ்நிலப் பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கை மேலும் நீடிப்பு

களனி கங்கையை அண்டிய தாழ்நிலப் பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட கடுமையான வெள்ள எச்சரிக்கை மேலும் 48 மணித்தியாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

இதேவேளை, தெதுறு ஓயா தாழ்நிலப் பகுதிக்கு விடுக்கப்பட்டிருந்த வெள்ள அபாய எச்சரிக்கை மேலும் 48 நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, பாதிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், ஏற்படக்கூடிய வெள்ளச் சூழ்நிலைகளில் இருந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# சிறுவர் பராமரிப்பு நிலையங்களை இன்று முதல் மீண்டும் திறக்க உத்தரவு

நாட்டில் இன்று முதல் பாதுகாப்பான சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமையில் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசு மற்றும் தனியார் துறைகளில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் தொழில் நிபுணர்களின் குழந்தைகளுக்குப் பராமரிப்பு வழங்குவதற்காக நாளை முதல் பாதுகாப்பான சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்குமாறு அனைத்து சிறுவர் பராமரிப்பு நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# எரிபொருள்கள் விலையில் டிசம்பரில் மாற்றம் இல்லை

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் எரிபொருள் விலைகளில் எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இதனை அறிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் எரிபொருள் விலை டிசம்பர் மாதம் முழுவதும் தொடரும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# அனர்த்தம் காரணமாக பாதிக்கப்படாத அரச நிறுவனங்கள் இன்று வழமைக்கு

அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் வழக்கம் போல் இன்று திறக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனங்களில் சேவைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.




# கட்டுநாயக்கவில் சிக்கியிருந்த இந்தியர்கள் நாடு திரும்பினர்

பல நாள்களாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிக்கி இந்தியாவுக்குப் பயணிக்க முடியாமல் தவித்த சுமார் 400 இந்தியர்கள், வெள்ள நிவாரண உதவிகளை ஏற்றி வந்த 2 விமானங்கள் மூலம் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுமார் 150 இந்தியப் பயணிகள் நேற்று பிற்பகல் 02:30க்கு ஐ.சி.-130 விமானம் மூலம் இந்தியாவின் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 250 இந்தியப் பயணிகள் நேற்று மாலை 04:00 மணிக்கு ஐ.எல்.-76 விமானம் மூலம் இந்தியாவின் திருவனந்தபுரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக விமானப் போக்குவரத்துகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

இதன் காரணமாகக் மேற்படி குழுவைச் சேர்ந்த இந்திய விமானப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு விசேட சலுகைக் காலம் அறிவிப்பு

சீரற்ற வானிலை மற்றும் நாட்டில் நிலவும் இயற்கை அனர்த்த நிலைமைகள் காரணமாக, உரிய தினத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்க மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள அலுவலகங்களுக்குச் செல்ல முடியாமல் பல சாரதிகள் சிரமப்படுவதால், திணைக்களம் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

அதன்படி, நவம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்குச் விசேட சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் காலாவதியாகும் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு வாகனம் செலுத்துவது வீதி விதிமீறலாகக் கருதப்படாது எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை பொலிஸ் மற்றும் தொடர்புடைய அனைத்துப் பிரிவுகளுக்கும் இந்தத் தீர்மானம் குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகைக் காலப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்தரம் காலாவதியாகும் சாரதிகள், அபராதமோ அல்லது வேறு சட்டச் சிக்கல்களோ இன்றி தமது அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தச் சலுகை டிசம்பர் 25ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும் எனவும், அதன் பின்னர் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு வாகனம் செலுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.



# திருமலையில் 60 ஆயிரம் பேருக்குப் பாதிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 18,734 குடும்பங்களைச் சேர்ந்த 60,458 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 212 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து நேற்று மாலை 05.00 மணி வரையான தகவலின் அடிப்படையில் வெளியிடப்பட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 493 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 15,896 குடும்பங்களைச் சேர்ந்த 52,206 பேர் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 34 பாதுகாப்பானதற்காலிகமுகாம்களில் 2,838 குடும்பங்களைச் சேர்ந்த 8,252 பேர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 518 குடும்பங்களைச் சேர்ந்த 1839 பேரும், தம்பலகாமத்திலும் 448 குடும்பங்களைச் சேர்ந்த 1,373 பேரும், மொறவெவவில் 129 குடும்பங்களைச் சேர்ந்த 403 பேரும், சேருவிலவில் 270 குடும்பங்களைச் சேர்ந்த 776 பேரும், வெருகலில் 1,485 குடும்பங்களைச் சேர்ந்த 4,483 பேரும், மூதூரில் 4,731 குடும்பங்களைச் சேர்ந்த 14,419 பேரும், கிண்ணியாவில் 4,903 குடும்பங்களைச் சேர்ந்த 16,303 பேரும், கோமரங்கடவலவிக் 242 குடும்பங்களைச் சேர்ந்த 803 பேரும், பதவி சிறிபுரவில் 391 குடும்பங்களைச் சேர்ந்த 1,242 பேரும், குச்சவெளியில் 5,339 குடும்பங்களைச் சேர்ந்த 17,866 பேரும், கந்தளாயில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 951 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்ததன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதுடன் மீட்பு நடவடிக்கைகளில் முப்படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

# பல்கலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஒத்திவைப்பு



நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை கல்வி நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகங்களில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை அமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மற்றும் நிவாரண ஏற்பாடுகளை மேற்கொள்ளவதற்கும், மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புகளை அறிந்து கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த பட்டப்பின் கற்கைகளுக்கான பட்டமளிப்பு விழா, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாநாடு, பொறியியல் கண்காட்சி என்பன பிற்போடப்பட்டுள்ளன.




# பாதிப்புற்ற மக்களுக்கு படகில் சென்று சமைத்த உணவை விநியோகித்த சஜித்

கொலன்னாவை பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ படகு மூலம் சமைத்த உணவு மற்றும் குடிதண்ணீரை தாமே நேரில் எடுத்துச் சென்று விநியோகித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் காலை கொலன்னாவை பிரதேசத்திற்கு மேற்கொண்ட விஜயத்திற்கு மத்தியில் படகுத் தேவை எடுத்துரைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நேற்றுப் பிற்பகலாகும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலையீட்டின் மூலம் கொலன்னாவை பிரதேசத்திற்கு இரண்டு படகுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

அவ்வாறு வழங்கி வைக்கப்பட்ட இரண்டு படகுகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் குடி தண்ணீர் வசதிகளை நேரில் சென்று வழங்கி வைத்தார்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு எடுத்துச் செல்ல சமைத்த உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஏற்பாடு செய்திருந்தார்.










# இலங்கையர் தின நிகழ்வை கொண்டாட ஒதுக்கிய ரூ.300 கோடியை நிவாரணப் பணிக்கு மாற்றுங்கள்

## அரசங்கத்திடம் சஜித் பிரேமதாஸ கோரிக்கை

இலங்கையர் தினத்தைக் கொண்டாட ஒதுக்கிய ரூ.3000 மில்லியன் நிதியை பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பயன்படுத்துங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்சமயம் நாம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக்கொண்டிருக்காமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் வேண்டும். இந்த நிவாரணத்தை வழங்கும் முறைமையில் சில நடைமுறைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அரச அதிகாரிகளுக்கு நிதியை விடுவிப்பதில் சில சிக்கல்கள் காணப்பட்டு வருகின்றன. பில்லியன் கணக்கான நிதி ஒதுக்கப்பட்டாலும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி மக்களைச் சென்றடைய வேண்டும். அதுபோலவே, அவற்றிலிருந்து நிவாரணமும் அவர்களுக்கு போய்ச்சேர வேண்டும். குறைபாடுகள் இருந்தாலும், அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சுக துக்கங்களை கேட்டறிய நேற்று அவர் பல பிரதேசங்களுக்கும் விஜயம் செய்தார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொதடுவ, வெல்லம்பிட்டி மற்றும் கொலன்னாவை போன்ற பிரதேசங்களுக்கு இவ்வாறு அவர் நேற்று விஜயம் செய்தார்.

இந்நேரத்தில் நிவாரணத்தைப் பெறுக் கொடுப்பதற்கு, சேவைகளைப் பெறுக் கொடுப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவது நம் மனைவரினதும் அவசிய பணியாகும். இந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலேயே நாம் சிந்திக்க வேண்டும். பேதமின்றி உதவி ஒத்தாசைகளை வழங்க வேண்டும். தேவையான பணிகளை மேற்கொள்வதற்கான நம்பிக்கையை அரச அதிகாரிகளுக்குப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையர் தினத்தைக் கொண்டாட அரசாங்கம் ஒதுக்கியுள்ள ரூ.3000 மில்லியன் நிதியை பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பயன்படுத்துமாறு நான் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கிறேன். மூன்று நாள்கள் இவ்வாறு கொண்டாடுவதை விட, மக்களுக்காக இந்த நிதியை ஒதுக்கி, அனர்த்தத்தால் அழிந்து போன மக்களின் வாழ்விடங்கள், சொத்துக்கள், சேதங்கள், இழப்புகள், ஜீவனோபாயங்களைக் கட்டியெழுப்பி, மக்களை இயல்பு வாழ்க்கைக்கு திருப்புவது காலத்தால் சிறந்த பணியாக அமையும். ஆனபடியால் இழப்பீடு வழங்குவதற்கும், அடிப்படை வசதிகளைச் சரி செய்து கொடுப்பதற்கும் மக்கள் பக்கம் நின்று சிந்தித்து இந்த இலங்கையர் தின கொண்டாட்டத்திற்காக ஒதுக்கிய நிதியை இந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துமாறும், இந்தப் பணத்தை பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

# கவிஞர் சந்தியூரான் காலமானார்!

(பழுவூரான்)



ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் கவிஞருமான க.கிருஷ்ண பிள்ளை (சந்தியூரான்) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் பல்வேறு கவிதைகள்,கட்டுரைகள் மற்றும் சிறுகதைகள் எனப் பல்வேறு ஆக்கங்களைத் "தென்றல்" சஞ்சிகை உட்பட பல்வேறு சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார்.

இவர் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க உறுப்பினராக இருந்து பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரின் மறைவு ஈழத்து இலக்கியத் துறைக்குப் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் தலைவரான சேயோனின் தந்தையாரான கிருஷ்ணபிள்ளையின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை மட்டக்களப்பில் நடைபெற்றன.



# மன்னாரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் கட்டமாக நிவாரண பொருள்கள்

தற்போது இலங்கையில் காணப்படுகின்ற காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் கட்டையடம்பன், இசைமழை தாழ்வு, முருங்கன் உள்ளிட்ட கிராம மக்களுக்கான ஒரு தொகுதி நிவாரண பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

கடும் மழையின் காரணமாக இசைமழை தாழ்வு கிராமம் முற்றிலும் நீரில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை அவசரமாக வழங்க முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் பணிப்புரைக்கமைய சமாதான தூதரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான ஷேக் அமானி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியுள்ளார்.

மிகவும் அவசர தேவை நாடியுள்ள மக்களுக்கு இப் பொருள்களைக் கொண்டு செல்ல தேவையான வாகன வசதியை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.









# சாயி நிலையத்தில் தயாராகும் நிவாரணப் பொதிகள்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பொருட்டு, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் உலர் உணவுப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு, விநியோகத்துக்காகப் பொதியிடப்படும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அப்பொழுது எடுக்கப்பட்ட படங்கள் இங்கே.



# நலிவெலாம் நீங்கும்

தேசிக்காயைப் பிழிந்து
கோதை வீசி எறிந்ததுபோல்
கிடக்கிறது.... நாடு.



'டித்வா'வின் இரண்டுநாள்
தாண்டவத்தால்
அவலம் நாட்டையே
வலம்வந்து....
நாடுகடந்து சென்றுவிட்டது!

நாநூறு மில்லிமீற்றருக்கு
மேலும்,பெய்த மழை!
அம்மாடி.... என
மழைமானியே
அளவில் சற்று
நீண்டு பெருத்தது!

காலாகாலமாகக் கட்டியணைத்திருந்த
மண் மகவைக்
கைவிட நேர்ந்தது
மலைத் தாய்க்கு....
அதுவோ,
ஒன்றாய்ப் பத்தாய்
ஆட்களை மூடியது போய்
கிராமங்களையே
கீரையாய்க் கடைந்தது.



நீரின் ஏகபோகத்தால்
கர்வங் கொண்டிருந்தன
குளங்கள்.

அவற்றின்
வயிறுகள் புடைத்ததால்
வான் வாய்கள் வெடித்தன.

பள்ளம் நோக்கியே
ஓடிப்பழகிய வெள்ளம்
தன் முள்ளந்தண்டே முறிந்ததால்
கட்டுப்பாட்டை இழந்தது
கடலாய் இங்கே விரிந்தது!



மக்களாய் வெளியேறியது போய்
மக்களை வெளியேற்ற
அவசரகாலச் சட்டமும் வந்தது.

உடுக்கை இழந்தவன்
கை எனும் பாங்கிலே,
உடனடியாகவே
இந்தியா வந்தது.

போர் முடிந்து
பதினாறாண் டாகியும்
சீரடைந்திடா நாடு,
வேர் பிடுங்கிய
மரங்களின் இடத்திலே
விதைகளை நட்டு
விளைவது எந்நாள்?



ஆதலின்,
இந்தியா தந்திடும்
அறிவுரை ஏற்று,
இந்திய-இலங்கை
ஒப்பந்தம் போற்றி
ஒன்றியத் தன்மையில் அரசமைப் பாக்கி,
ஒருமித்த நாட்டிலே
ஒருமித்து வாழ்வோம்....,

எனும்,
நம்பிக்கை ஏற்படும்
வகையிலே நாட்டில்
நடத்தைகள் ஏற்படின்
நலிவெலாம் நீங்கும்.

- அண்ணாதாசன் -







# மன்னாரில் எண்பதாயிரம் பேருக்குப் பாதிப்பு ஹெலி மூலமான மீட்பு நடவடிக்கை தாமதம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை நிலையால் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றி மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை படிப்படியாக குறைந்து இயல்பு நிலைக்கு மாறி வருகிறது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 பேர் குறித்த அசாதாரண காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 87 முகாம்களில் 11 ஆயிரத்து 230 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 505 நபர்கள் தங்கள் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது மன்னார் மாவட்டத்தில் இயல்பான வானிலை காணப்பட்டாலும் மன்னார் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் இப்போதுதான் வடிய ஆரம்பித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தை இணைக்கும் இரண்டு வீதிகளும் துண்டிக்கப்பட்டு ஏனைய மாவட்டங்களுடன் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

மன்னார் – யாழ் பிரதான வீதி(ஏ-32) மற்றும் மன்னார் – மதவாச்சி பிரதான வீதி ஆகிய இரு வீதிகளும் தற்போது பயணம் செய்ய முடியாத நிலையில் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது.

மாவட்டத்தில் உள்ள அதிக எண்ணிக்கையான குளங்கள் பெருக் கெடுத்துள்ளதன் காரணமாக மல்வத்து ஓயா, பாலியாறு, பறங்கியாறு போன்ற ஆறுகளில் இருந்து அதிக அளவில் நீர் பெறுக்கெடுக்கின்றமையினாலும் பல கிராமங்கள் மூழ்கிய நிலையில் தொடர்புகள் இன்றி காணப்படுகின்றன.

தனித்து விடப்பட்ட சுமார் 250 பேரை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேக்கம் தொங்கு பாலம் பகுதியில் கடந்த இரு தினங்களாக தவித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உலங்கு வானூர்தி உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் கூராய் பகுதியில் உள்ள குளம் பெருக்கெடுத்ததன் காரணமாக 40 நபர்கள் மரங்களிலும் உயர்ந்த கட்டடங்களிலும் தஞ்சமடைந்த நிலையில் நீர் மட்டம் குறைவடைந்தமையை அடுத்து அவர்கள் அப்பகுதியில் உள்ள மண் திட்டியில் தஞ்சமடைந்துள்ளனர்.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக அவர்களை மீட்கும் நடவடிக்கை தாமதித்து உள்ளது. அவர்களுக்கான உணவு வழங்கும் நடவடிக்கைகள் கடற்படையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு மற்றும் மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என அவர் மேலும் தெரிவித்தார்.






# ‘டித்வா’ புயல் காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு துணை நிற்கத் தயார்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

‘டித்வா’ புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்குத் துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“டித்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் – பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர்.

இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 177 பேர் தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்.

‘டித்வா’ புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருள்கள் – மருந்துப் பொருள்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.



# ‘டித்வா’ புயலால் 3 பேர் பலி; 149 கால்நடைகள் உயிரிழப்பு

‘டித்வா’ புயல் காரணமாக தமிழகத்தில் இதுவரை 3 பேர் பலியாகியுள்ளனர். 57 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் டித்வா புயல் மழை தொடர்பான சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்தனர். இருவர் தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இறந்தனர். மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். 149 கால்நடைகள் உயிரிழந்தன.

57 ஆயிரம் ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், தஞ்சையில் 15 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்களும், மயிலாடுதுறையில் 8000 ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர டெல்டா மாவட்டங்களில் 234 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

தமிழகத்தில் மழை பாதிப்பு அதிகமுள்ள 9 மாவட்டங்களில் 38 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தி அதில் 2300 பேரை தங்க வைத்துள்ளோம்.

புயலின் அடுத்தக்கட்ட தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று மதியம் புதிய அறிவிப்பு வெளியிடும். அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்கள் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பொது மக்கள் வதந்திகளை நம்பாமல் அரசு சார்பாக வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் பின்பற்ற வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.



# காங். தலைவர்களுடன் ராகுல், கார்கே சந்திப்பு

பிஹார் காங்கிரஸ் தலைவர்களை கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து பேசினர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி நேற்றுமுன்தினம் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வீட்டுக்கு சென்றார். அங்கு பிஹார் மாநில காங்கிரஸ் தலைவர்களை ராகுலும் கார்கேவும் சந்தித்து பேசினர். பிஹார் காங்கிரஸ் பொறுப்பாளர் கிருஷ்ணா அல்லவாரு, மாநில காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் ராம் ஆகியோரும் அப்போது உடனிருந்தனர்.

சமீபத்திய பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்த நிலையில், மாநிலத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து அவர்கள் விவாதித்தனர் என கூறப்படுகிறது.

பிஹார் தோல்விக்கான காரணங்களை அறிய, அம்மாநில தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களை ராகுல், கார்கே ஆகிய இருவரும் ஏற்கெனவே இந்திரா பவனில் சந்தித்து பேசியுள்ளனர்.

# பொது மன்னிப்புக்காக ஜனாதிபதியிடம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு முறையீடு



இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கிடம் பொது மன்னிப்பு கோரும் கோரிக்கையை பிரதமர் நெதன்யாகு உத்தியோகப்பூர்வமாக சமர்ப்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை இஸ்ரேலின் ஜனாதிபதி மாளிகையும் உறுதி செய்துள்ளது. மேலும், இது ஒரு அசாதாரண கோரிக்கை என்பதையும், இது குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ளது என்பதையும் ஜனாதிபதி அலுவலகம் அறிந்திருக்கிறது.

இந்த விவகாரம் தொடர்பில் அனைத்து கருத்துகளையும் பெற்ற பிறகு, ஜனாதிபதி பொறுப்புடனும் உண்மையுடனும் கோரிக்கையை பரிசீலிப்பார் எனவும் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

நெதன்யாகு மட்டுமின்றி, அவரது மனைவி உட்பட குடும்ப உறுப்பினர்கள் பலரும் ஊழல் வழக்குகளில் சிக்கி விசாரணையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விசாரணை இறுதிகட்டத்தை எட்டிய நிலையில், பிரதமர் நெதன்யாகு காஸா மீது போர் பிரகடனம் செய்தார். போர் காலம் என்பதால், ஊழல் விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது ட்ரம்பின் அழுத்தம் காரணமாக போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், காஸா மீதான தாக்குதலை நெதன்யாகு நிறுத்தவில்லை. அத்துடன், லெபனான் மீதும் சிரியா மீதும் புதிதாக தாக்குதலை தொடங்கும் முனைப்பில் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

காஸா போர் நிறுத்தம் எந்த இடையூறும் இன்றி நீடிக்கும் என்றால், தேர்தலை எதிர்கொள்ள நேரிடும். ஏற்கனவே பணயக்கைதிகளை மீட்க நெதன்யாகு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் போரை முன்னெடுப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டு இஸ்ரேல் மக்களிடையே கோபத்தையும் அதிருப்தியையும் தூண்டியிருந்தது.

இதனாலையே, இஸ்ரேல் மக்கள் வீதியில் இறங்கி போராடும் நிலையும் ஏற்பட்டது. ஆனால், தனது அரசியல் ஆதாயத்திற்காக காஸா மீது கொடூரத் தாக்குதலை முன்னெடுத்ததுடன், பெண்கள், சிறார்கள் உட்பட பாலஸ்தீன மக்கள் 70,000 பேர்கள் இறப்புக்கு அவரது முடிவு காரணமானது.

மட்டுமின்றி, அவர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் போர் குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டதுடன், கைதாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தன் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை அவர் தொடர்ந்து மறுத்து வருவதுடன், தாம் குற்றமற்றவர் என்றே சாதித்து வருகிறார்.

இஸ்ரேலில் அவரது அரசியல் செல்வாக்கு குறைந்து வருவதாலையே, தற்போது ஜனாதிபதியின் மன்னிப்பை அவர் கோரியுள்ளார் என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

# வெனிசுலாவின் வான்வெளி முழுமையாக மூடப்பட்டது

## ட்ரம்ப் அறிவிப்பு





இராணுவ நடவடிக்கைகள் குறித்த நெருக்கடி அதிகரித்து வரும் நிலையில், வெனிசுலாவிற்கு மேலேயும் அதைச் சுற்றியுள்ள வான்வெளியும் முழுமையாக மூடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

தமது சமூக ஊடகத்தில் பதிவிட்ட ட்ரம்ப், இதை உறுதி செய்துள்ளார். அனைத்து விமான நிறுவனங்கள், விமானிகள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் மனித கடத்தல்காரர்கள் ஆகியோர், தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மோசமான பாதுகாப்பு நிலைமை காரணமாக வெனிசுலா மீது பறக்கும் போது ஆபத்தான சூழ்நிலை ஏற்படக் கூடும் என்று அமெரிக்க ஃபெடரல் விமான நிர்வாகம் முக்கிய விமான நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து ட்ரம்பின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தென் அமெரிக்காவிற்கு அப்பால் அமெரிக்க இராணுவக் குவிப்பு மற்றும் வெனிசுலா மற்றும் கொலம்பியாவிற்கு அப்பால் சர்வதேச கடல் பகுதியில் கப்பல்களை குறிவைத்துள்ளதுடன், இராணுவத் தாக்குதல்கள் நடத்தியதன் விளைவாக குறைந்தது 83 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தால், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கடியான சூழல் உருவாகியுள்ளது.

வெனிசுலா நிர்வாகம், அப்பாவி மீனவர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதாக குற்றச்சாட்டியுள்ள நிலையில், போதைப்பொருள் கடத்தல் குழுக்களையே குறிவைத்ததாக ட்ரம்ப் நிர்வாகம் பதிலளித்துள்ளது.

ஆனால், அமெரிக்க இராணுவம் சட்டத்திற்குப் புறம்பான தாக்குதல்களை முன்னெடுப்பதாகவும், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள் என்றும் லத்தீன் அமெரிக்க தலைவர்கள், சர்வதேச சட்ட வல்லுநர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சில அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த நிலையில், இந்தப் பிராந்தியத்தில் இராணுவப் படையெடுப்பை ட்ரம்ப் பயன்படுத்துவார் என்ற கவலைகள் தற்போது அதிகரித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -01.12.2025

## மேஷம்

இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவகள் ஏற்படும். இன்று சேமிப்பதற்கும் இயலாத நிலை இருக்கும்.

## ரிஷபம்

நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப் படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரமுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கடகம்

இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதி-காரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

## சிம்மம்

உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## கன்னி

இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும்.

## துலாம்

அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

## விருச்சிகம்

உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -01.12.2025




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. சளி மற்றும் இருமல் ஏற்படவும் வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் ஆரோக்கியமான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.என்றாலும் அதிக வேலை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள். பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.



# மன்னாரில் புயலின் போது நீரில் மூழ்கிய ட்ரோலர்களை மீட்பதற்கு நேற்று முயற்சி

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் புயலால் ஏற்பட்ட தாக்கம் சற்றுத் தணிந்துள்ள நிலையில் மீட்பு பணிகள் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

புயலில் இருந்து பாதுகாப்புக்காக மன்னார் பிரதான பாலம் மற்றும் கோந்தைப்பிட்டி கடற்கரைப் பகுதிகளில் தரித்து வைக்கப்பட்ட ட்ரோலர் மீன்பிடிப் படகுகள் நீரில் மூழ்கியுள்ளன. இந்தப் படகுகளை மீட்கும் பணி நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூர் மீனவர்கள் மற்றும் ட்ரோலர் உரிமையாளர்கள் இணைந்து மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் இதுவரை படகுகளை மீட்க முடியாத நிலையே காணப்படுகிறது.

மன்னார் பிரதான பாலத்தின் ஆழமான பகுதியில் நான்கு ட்ரோலர் படகுகள் முழுமையாக மூழ்கி உள்ளமையால் மீட்கும் பணி வெற்றிகரமாக அமையவில்லை.

இந்தப் பின்னணியில் தொடர்ச்சியாக மீனவர்களின் உதவியுடன் படகுகளை மீட்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

மூழ்கிய ட்ரோலர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது.